## ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்குஇணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்புடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம், கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii)ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான வைப்புக்கள் 02 இனது முன்னைய ஆண்டிற்கான ரூபா 580,323 ஆன வட்டி மீளாய்வாண்டின் வருமானமொன்றாக நிதக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டின் வருமானத்திற்கு செம்மையாக்கல் செய்யவில்லை என. | ஆண்டிற்குரிய வருமானத்தைசரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு எதிர்வரும் ஆண்டு செலுத்த வேண்டிய ரூபா 1,433,032 ஆன கடன் தவணையை நீண்ட கால பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2022 கணக்காண்டில் சரிசெய்வதாக. | எதிர்வரும் ஆண்டு செலுத்த வேண்டிய கடன் தவணையை நடைமுறை பொறுப்பின் கீழ் காட்ட வேண்டும். |
| (இ) | கடந்த ஆண்டு கணக்கீட்டு குறைபாடுகளின் கீழ் சுட்டிக்காட்டிய தவறை மீளாய்வாண்டில் சீராக்கும் போது, காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 2,725,000 கூடுதலாகவும், மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 10,256,826 மற்றும் வேலை கடன்கொடுனர் பெறுமதி ரூபா 54,268 கூடுதலாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | ஜர்னல் குறிப்புகள் மூலம் சரியான பெறுமதிகள் கணக்குகளில் செம்மையாக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த கணக்கு கணக்காய்வின் போது சுட்டிக் காட்டப்படும் கணக்கீட்டு குறைபாடுகளை சரியாக கணக்குகளில் செம்மையாக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | காணி மற்றும் கட்டிடங்கள் 93 அலகுகளின் பெறுமதி ஒழுங்காக சரியான பெறுமதிக்கு மதிப்பிடாது,ரூபா 257,000 ஆக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தன. | தற்காலிக மதிப்பீடொன்று வழங்கப்பட்டுள்ளதாக. | சொத்துக்கள் நிகழ்கால சந்தை பெறுதியின் மீது சரியாக மதிப்பீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் ஐந்தொகையில் காட்டியிருந்தரூபா 1,017,017 ஆன 03 சொத்துக்கள் மற்றும் ரூபா 45,640,792 ஆன 02 பொறுப்புக்களின் பதிவேடுகள், கணிப்பீட்டறிக்கை மற்றும் பேரேட்டு மீதிப் பட்டியல்கள் சமர்பிக்கப்படாததால்,கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | கிடைத்த அன்பளிப்பு தொகைக்காக பதிவேடொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன், ஏனைய மீதிகளிற்காக பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளதாக. | நிதிக்கூற்றுக்களில் மீதிகளை உறுதி செய்யும் சான்றுகளை தயாரிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 41,689,826 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 47,002,705 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை தொடர்பான அவதானங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியன்று அறவிடப்படாத நிலுவை வீதவரி வருமானம்ரூபா 12,800,300 ஆனதுடன், அம்மீதியினுள் ஒரு அலகின் நிலுவை ரூபா 5,000 இற்கு அதிகமான 05 ஆண்டுகளை விஞ்சிய 282 வீதவரி அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,205,178 உம், வாடிக்கையாளர்களின் பெயர்கள் வீதவரி பதிவேட்டில் குறிப்பிடப்படாது ‘‘உரிமையாளர்’’ என மீதியை குறிப்பிட்டுள்ள 450 அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 609,065 உம், 53 அரச நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 85,641 உம் உள்ளடங்கியிருந்தன. | நடமாடும் சேவை நடாத்துதல், வீட்டுக் வீடு வீதவரி சேகரித்தல் மற்றும் சிவப்பு அறிவித்தல் வெளியிடலும் மேற்கொள்ளப்படுகின்றதாக. | நிலுவை வீதவரி அறவிட வேண்டும். |

(ஆ) **நிலுவை குழாய்க் கிணறு வருமானம்**

| | | |
|---|---|---|
| 05 ஆண்டுகளிற்கு விஞ்ய காலமாக நிலவிவரும் பில்லிடப்பட்ட ரூபா 3,920,055 ஆன குழாயக் கிணற்று வருமானத்தை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியிலும் அறவிட்டிருக்கவில்லை. | தற்போது குழாய்க் கிணறு பில்லிடல் நிறுத்தியுள்ளதாகவும், தொடர்ந்தும் நிலவிய நிலுவையை பதிவழிக்க பொதுச் சபை அங்கீகரித்துள்ளதென. | நிலுவை குழாய்க் கிணறு வருமானம் அறவிடப்பட வேண்டும். |

(இ) **முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர கட்டணம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 27 முச்சக்கர வண்டி சங்கங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,608,850 முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்காததுடன், அம் மீதியினுள் ஒரு முச்சக்கர வண்டி சங்கத்தின் மொத்த அனுமதிப்பத்திர கட்டண நிலுவை ரூபா 50,000 விஞ்சிய 15 சங்கங்களிலிருந்து அறவிட வேண்டிய கட்டணம் ரூபா 1,332,450 தொகை உள்ளடங்கியிருந்தது. | அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றதென. | நிலுவை முச்சக்கர வண்டி அனுமதிப்பத்திர கட்டணத்தை அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 2,938,260 ஆன 04 வாகனங்கள் 2016 மற்றும் 2017 ஆண்டுகளிலிருந்து பராதீனத்திற்காக பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டு இறுதியிலும் பராதீனம் செய்திருக்கவில்லை. | இவ்வாகனங்கள் பராதீன நிலையில் உள்ளதாகவும், மதிப்பீட்டறிக்கையை அழைப்பித்து தற்போது ஏலவிற்பனை செய்ய தேவையான செயற்பாடுகள் எடுக்கப்படுவதென. | குறித்த வாகனங்களை பராதீனம் செய்ய வேண்டும். |